6 FEB 2023
TAMILNADU LABOUR WELFARE BOARD

சுருக்கம்

தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் – தொழிலாளர் நல நிதி செலுத்தும் தொழிலாளர்கள் மற்றும் அவர்களது மகன்/மகளுக்கு திருமண உதவித் தொகைத் திட்டம் – உதவித் தொகையினை ரூ.10,000/–லிருந்து ரூ.20,000/– ஆக உயர்த்தி ஆணை வெளியிடப்படுகிறது.

---

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு(ஜி2)த் துறை

அரசாணை (டி) எண்.63

நாள் 25.01.2023
சுபகிருது வருடம், தை – 11
திருவள்ளுவர் ஆண்டு 2054

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (டி) எண்.63, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (ஜி2) துறை, நாள் 01.03.2011.
2. தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியச் செயலாளரின் கடிதம் எண். டி1/29302/2022, நாள் 24.06.2022 மற்றும் 02.09.2022.

------

ஆணை:

மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், சட்டப்படி திருமண வயதை அடைந்த தொழிலாளிக்கு அல்லது அத்தொழிலாளியின் மகன்/மகளுக்கு திருமண உதவித் தொகையாக ஆணாக இருப்பின் ரூ.3,000/–, பெண்ணாக இருப்பின் ரூ.5,000/– வழங்கும் திட்டம் 01.03.2011 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதங்களில், தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்திற்கு தொழிலாளர் நல நிதி செலுத்தும் சட்டப்படியான திருமண வயதை அடைந்த தொழிலாளர்கள் மற்றும் அவர்களது மகன்/மகளுக்கு திருமண உதவித் தொகையினை கடந்த 01.08.2018 அன்று நடைபெற்ற 77–வது வாரியக் கூட்டத் தீர்மானத்தின்படி, ஆண் பெண் இருபாலருக்கும் ரூ.10,000/– ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது என்றும், தற்போது 28.06.2022 அன்று நடைபெற்ற 79–வது வாரிய கூட்டத் தீர்மானம் இனம் 4–இன்படி அத்தொகையினை ரூ.10,000/–லிருந்து ரூ.20,000/– ஆக உயர்த்தி வழங்க ஆணை வெளியிடுமாறு தமிழ்நாடு தொழிலாளர் நல வாரிய செயலாளர் கோரியுள்ளார்.

3. தமிழ்நாடு தொழிலாளர் நல வாரிய செயலாளரின் செயற்குறிப்பினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தில் நல நிதி செலுத்தும் தொழிலாளர்களுக்கு, தொழிலாளர் நல வாரியத்தின் மூலம், சட்டப்படி திருமண வயதை அடைந்த தொழிலாளிக்கோ அல்லது அத்தொழிலாளியின் மகன்/மகளுக்கு திருமண

உதவித் தொகை ரூ.10,000/–லிருந்து ரூ.20,000/– ஆக உயர்த்தி வழங்கவும், மேற்படி திருமண உதவித் தொகை அவரது பணிக்காலத்தில் ஒருமுறை மட்டும் வழங்குவதற்கும், இதனால் ஏற்படும் செலவினத்தை தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் நல நிதியிலிருந்து மேற்கொள்ளவும், 1972–ஆம் ஆண்டு தொழிலாளர் நல நிதிச் சட்டம் பிரிவுகள் 20 மற்றும் 17–இன்கீழ் தமிழ்நாடு தொழிலாளர் நல வாரிய செயலாளருக்கு ஆணையிடப்படுகிறது. மேலும், இந்த உயர்த்தப்பட்ட தொகை 01.04.2023 முதல் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் எனவும் ஆணையிடப்படுகிறது.

(ஆளுநரின்ஆணைப்படி)

முகமது நசிமுத்தின்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்
முதன்மைச் செயலாளர் / தொழிலாளர் ஆணையர், சென்னை–600 006.
தமிழ்நாடு தொழிலாளர் நல வாரிய செயலாளர், சென்னை–600 006.
மாநில கணக்காயர், சென்னை – 600 018.
மாநில கணக்காயர், சென்னை – 600 018 (பெயரில்).

நகல்:–
மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சரின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–600 009.
நிதி (தொ.ந.(ம)தி.மே./ வரவு – செலவு / பொது– II)த் துறை, சென்னை–600 009.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளரின் முதுநிலை தனிச் செயலர்,
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை–600 009.
இருப்பு கோப்பு/உதிரி நகல்.
சுத்த நகல் (கோப்பு எண். 13278/ஜி2/2022).

//ஆணைப்படிஅனுப்பப்படுகிறது//

25/1/23

பிரிவு அலுவலர்

25/01/2023

சுருக்கம்

தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் – தொழிலாளர் நல நிதி செலுத்தும் தொழிலாளர்கள் விபத்தில் மரணமடைந்தால் வழங்கப்படும் உதவித் தொகை ரூ.1,00,000/–லிருந்து ரூ.2,00,000/– ஆக உயர்த்தி ஆணை வெளியிடப்படுகிறது.

---

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு(ஜி2)த் துறை

அரசாணை (டி) எண்.75

நாள் 31.01.2023
சுபகிருது வருடம், தை – 17
திருவள்ளுவர் ஆண்டு 2054

படிக்கப்பட்டவை:

தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியச் செயலாளரின் கடிதம் எண். டி2/29406/2022, நாள் 29.06.2022 மற்றும் 05.09.2022.

------

ஆணை:

மேலே படிக்கப்பட்ட தமிழ்நாடு தொழிலாளர் நல வாரிய செயலாளரின் கடிதங்களில், 25.05.2022 அன்று நடைபெற்ற 79வது வாரிய கூட்டத் தீர்மானம் இனம் 5–ன்படி, தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்திற்கு தொழிலாளர் நல நிதி செலுத்தும் தொழிலாளர் விபத்தில் மரணமடைந்தால், வழங்கப்படும் விபத்து மரண உதவித் தொகையினை ரூ.1,00,000/–லிருந்து ரூ.2,00,000/– ஆக உயர்த்தி வழங்க ஆணை வெளியிடுமாறு கோரியுள்ளார்.

2. தமிழ்நாடு தொழிலாளர் நல வாரிய செயலாளரின் செயற்குறிப்பினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தில் நல நிதி செலுத்தும் தொழிலாளர் விபத்தில் மரணமடைந்தால், தொழிலாளர் நல வாரியத்தின் மூலம் வழங்கப்படும் விபத்து மரண உதவித் தொகையினை ரூ.1,00,000/–லிருந்து ரூ.2,00,000/– ஆக உயர்த்தி வழங்கவும், இதனால் ஏற்படும் செலவினத்தை தமிழ்நாடு தொழிலாளர் நல வாரிய நல நிதியிலிருந்து மேற்கொள்ளவும், மேலும், இந்த உயர்த்தப்பட்ட உதவித் தொகையினை 01.04.2023 முதல் நடைமுறைப்படுத்தப்படவேண்டும் எனவும் ஆணையிடுகிறது.

(ஆளுநரின்ஆணைப்படி)

முகமது நசிமுத்தின்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்

முதன்மைச் செயலாளர் / தொழிலாளர் ஆணையர், சென்னை–600 006.

தமிழ்நாடு தொழிலாளர் நல வாரிய செயலாளர், சென்னை–600 006.
மாநில கணக்காயர், சென்னை – 600 018.
மாநில கணக்காயர், சென்னை – 600 018 (பெயரில்).

நகல்:–
மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை
அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–600 009.
நிதி (தொ.ந.(ம) தி.மே./ வரவு – செலவு / பொது– II) த் துறை, சென்னை–600 009.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளரின் முதுநிலை தனிச் செயலர்,
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை–600 009.
இருப்பு கோப்பு/உதிரி நகல்.
சுத்த நகல் கோப்பிற்கு (கோப்பு எண். 13297/ஜி2/2022).

//ஆணைப்படிஅனுப்பப்படுகிறது//

31/1/23
பிரிவு அலுவலர்
31/01/2023

4/5

சுருக்கம்

தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் – தொழிலாளர் நல நிதி செலுத்தும் தொழிலாளர் இயற்கை மரணமடைந்தால், இயற்கை மரண உதவித் தொகை வழங்கும் திட்டம் – உதவித் தொகையினை ரூ.25,000/–லிருந்து ரூ.50,000/–ஆக உயர்த்தி ஆணை வெளியிடப்படுகிறது.

---

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு(ஜி2)த் துறை

அரசாணை (டி) எண்.90

நாள் 03.02.2023
சுபகிருது வருடம், தை – 20
திருவள்ளுவர் ஆண்டு 2054

படிக்க:

தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியச் செயலாளரின் கடிதம் எண். டி2/29405/2022, நாள் 29.06.2022 மற்றும் 05.09.2022.

------

ஆணை:

மேலே படிக்கப்பட்ட தமிழ்நாடு தொழிலாளர் நல வாரிய செயலாளரின் கடிதங்களில், 25.05.2022 அன்று நடைபெற்ற 79வது தமிழ்நாடு தொழிலாளர் நல வாரிய கூட்டத் தீர்மானம் இனம் 5–ன்படி, தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்திற்கு தொழிலாளர் நல நிதி செலுத்தும் தொழிலாளர் மரணமடைந்தால், இயற்கை மரண உதவித் தொகையினை ரூ.25,000/–லிருந்து ரூ.50,000/–ஆக உயர்த்தி வழங்க ஆணை வெளியிடுமாறு தமிழ்நாடு தொழிலாளர் நல வாரிய செயலாளர் கோரியுள்ளார்.

2. தமிழ்நாடு தொழிலாளர் நல வாரிய செயலாளரின் செயற்குறிப்பினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தில், தொழிலாளர் நல நிதி செலுத்தும் தொழிலாளர் மரணமடைந்தால், தொழிலாளர் நல வாரியத்தின் மூலம் வழங்கப்படும் இயற்கை மரண உதவித் தொகை ரூ.25,000/–லிருந்து ரூ.50,000/– ஆக உயர்த்தி வழங்குவதற்கு அரசு ஆணையிடுகிறது. மேலும், இதனால் ஏற்படும் செலவினத்தை தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் நல நிதியிலிருந்து மேற்கொள்ளவும், இந்த உயர்த்தப்பட்ட உதவித் தொகை 01.04.2023 முதல் நடைமுறைப்படுத்தப்படவேண்டும் எனவும் ஆணையிடுகிறது.

(ஆளுநரின்ஆணைப்படி)

முகமது நசிமுத்தின்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்

முதன்மைச் செயலாளர் / தொழிலாளர் ஆணையர், சென்னை–600 006.

தமிழ்நாடு தொழிலாளர் நல வாரிய செயலாளர், சென்னை–600 006.
மாநில கணக்காயர், சென்னை – 600 018.

<u>நகல்:–</u>
மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை
அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–600 009.
நிதி (தொ.ந.(ம) தி.மே./ வரவு – செலவு / பொது– II) த் துறை, சென்னை–600 009.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளரின் முதுநிலை தனிச் செயலர்,
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை–600 009.
இருப்பு கோப்பு/உதிரி நகல்.
சுத்த நகல் கோப்பிற்கு (கோப்பு எண். 13295/ஜி2/2022).

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

3/2/23

பிரிவு அலுவலர்

3/02/2023

1/8